நாள்.24.06.2025

**அசல் வழக்கு எண்.70/2021**
**பெயர்.மணிவாசன்**

**த.பெ. கந்தசாமி வேளாளர்**

**வா.சா.1– 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசல் வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து குறிச்சி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அதன் விஸ்திரணம் தெரியுமா என்றால் 200 குழி. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திலும் நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தெரியாது என்பதால் நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். என் மூத்த சகோதரர் சீனிவாசன். அவர் எங்கு உள்ளார் என்றால் தாவா சொத்தில் உள்ளார். அவர் இந்த வழக்கில் ஆஜராகி உள்ளாரா என்றால் தெரியாது. எதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா காலத்திலிருந்து அனைவரும் ஆழ்குழாய் கிணறு பயன்படுத்தி வருகிறோம். அந்த கிணற்றிலிருந்து என்னை தண்ணீர் எடுக்ககூடாது என்று தடுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன். என் தந்தைக்கு இரண்டு மனைவிகள். மூத்த மனைவி பெயர் தங்கராஜ் அம்மாள். இரண்டாவது மனைவி பெயர் ராஜகுமாரி. நான் மூத்த தாரத்து மகன். என் உடன் பிறந்தோர்கள் எத்தனை பெயர் என்றால் 5 பேர். 2 மகள்கள். 3 மகன்கள். மூத்த சகோதரர் பெயர் சீனிவாசன். 2வது நான். 3வது சாமிநாதன்,2ம் எதிர்வாதி. ஆழ்குழாய் கிணறு இணைப்பு நம்பர் தெரியுமா என்றால் 225. மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில். அதற்கு மின்சார கட்டணம் யார் செலுத்தி வருகிறார் என்றால் நானும் செலுத்தியுள்ளேன். என் அண்ணன், தம்பிகளும் செலுத்தியுள்ளார்கள். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு.

நான் ஒருமுறை பணம் செலுத்தியுள்ளேன். 20 வருடங்களாக யார் செலுத்தியது என்றால் அது இலவச இணைப்பு. யார் பராமரிப்பு செய்தது என்றால் எங்கள் மூவரின் செலவில் பராமரிப்பு செய்கிறோம். இந்த விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் ச.எண்.198/6பி, 198/6ஏ, 174/77 எவ்வளவு விஸ்திரணம் என்று சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. 2ம் மனைவி ராஜகுமாரிக்கு 5 குழந்தைகள். 2 மகன்கள்.3 மகள்கள். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. என் உடன்பிறந்தவர்களாக ஜீவரத்தினம்,

நவமணியை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.